தொகுதி - XVII ஆடி - 2017 இதழ் - 2

# சிந்தனை

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

தொகுதி–XVII ஆடி–2017 இதழ்–2

# சிந்தனை

பதிப்பாசிரியர்

**கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்**

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
2017

# CINTANAI

The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is Refereed Journal, its referees come from university scholars and the national scholarly community.


**Editor** Dr. K. T. Ganeshalingam

**Associate Editor** Prof. K. Arunthavarajah

**Managing Editor** Dr. Mrs. V. Pavaneshan

**Editorial Committee Members**
Mr. S. S. Uthayakumar
Dr. S. Jeevasuthan
Mrs. K. Karuna
Mrs. S. Ragavan
Mr. S. Pratheeparajah
Mr. S. Pathmanaban
Mrs. T. Sayanthan



**Annual Subscription** 1500/- SLR / 15US $
**Price per Copy** 500/- SLR

**Published by** The Faculty of Arts, University of Jaffna, Sri Lanka.

**Printed by** Guru Printers, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

**ISSN** 2478 - 1061

# தொல்லியல் மரபுரிமை சின்னங்களைப் பாதுகாப்பதில் எதிர்ப்படும் சவால்கள்: யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொல்லியல் ஆய்வு

சிவரூபி சஜிதரன்


## ஆய்வுச் சுருக்கம்

தொல்லியல் மரபுரிமை என்பது பல்லினப் பண்பாடு கொண்ட மக்கள் வாழும் நாட்டில் ஒவ்வொரு இனமக்களினது தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்தி காட்டும் நம்பகரமான ஆதாரமாகப் பார்க்கப்படுகின்றது. பண்டு தொட்டு இலங்கை வரலாற்று மூலங்களில் தனியொரு பிராந்தியமாக கூறப்பட்ட யாழ்ப்பாணத்திற்கு தொன்மையான தொடர்ச்சியான வரலாறு உண்டு என்பதை தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவை தொல்லியல், வரலாற்று, சமூக, சமய, விஞ்ஞான, தொழிநுட்ப, கட்டட, கலை பெறுமானங்களை பிரதிபலிக்கும் வகையிலும் அமைந்துள்ளன. யாழ்ப்பாண தொல்லியல் மரபுரிமைகளானது ஆதியிரும்புக் காலத்தில் இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்,ஐரோப்பியர் வருகைக்கு முன்பிருந்து மக்கள் ஒன்று கூடும் இடங்களில் அமைக்கப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள்,இந்து, பௌத்த மதம் சார்ந்த மரபுரிமைச் சின்னங்கள்,அரச மரபு சார்ந்த மரபுரிமைச் சின்னங்கள், ஐரோப்பியர் கால மரபுரிமைச் சின்னங்கள்என ஐந்து வகையாக பார்க்கப்படுகின்றது. இவ் மரபுரிமைச் சின்னங்களில் பலவும் ஐரோப்பியரது நடவடிக்கை, கடந்த உள்நாட்டு யுத்த சூழ்நிலை, இயற்கை அழிவுகள், மக்களிடையே மரபுரிமைச்சின்னங்கள் பற்றிய போதிய விழிப்புணர்வின்மை போன்ற பல்வேறு காரணங்களால் காலத்துக்கு காலம் அழிவுக்குட்பட்டிருந்தது. இவ் அழிவிலிருந்து எஞ்சிய மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பில் எதிர்நோக்கும் பிரச்சனைகள், சவால்களினை இனங்காணுதல், அவற்றின் பாதுகாப்பிற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கங்களாகும். இவ் ஆய்வு நோக்கங்களினை நிறைவு செய்யும் பொருட்டு களவாய்வினூடாக மரபுரிமைச் சின்னங்கள் நேரடி அவதானிப்பிற்கு உட்படுத்தப்பட்டே அவற்றின் சிதைவிற்கான காரணங்கள் அடையாளப்படுத்தப்பட்டதுடன் பாதுகாப்பு வழிமுறைகளும் கண்டறியப்பட்டுள்ளன. இலங்கை தொல்லியற் சட்டம் (Antiquities Amendment Act No. 24 of 1988) இன் பிரகாரம் இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல், வரலாற்றுப் பெறுமதியுடைய காணிகள், கட்டிடங்கள், மரங்கள் போன்ற யாவற்றையும் மரபுரிமைச் சின்னங்களாக பிரகடனப்படுத்தி வருகின்றது. இதன் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள் மற்றும் அடையாளப்படுத்தப்பட்ட, அடையாளப்படுத்தப்படாத மரபுரிமைச் சின்னங்கள் போன்றன இயற்கை, சமூகம், நிர்வாகம், வளங்கள்சார்ந்த பிரச்சனைகளால் அழிவுக்குட்பட்டு வருவதனை அவதானிக்க முடிவதால் அவற்றுக்கான பாதுகாப்பு வழிமுறைகளை சிறந்த திட்டமிடலின் அடிப்படையில் கையாளப்பட வேண்டும் என்பதனையே இவ்வாய்வு எடுத்துரைக்கின்றன.


திறவுச் சொற்கள்: மரபுரிமைச் சின்னங்கள், நினைவுச் சின்னங்கள், மரபுரிமை முகாமைத்துவம் மற்றும் மரபுரிமைப் பெறுமானங்கள்

## ஆய்வு அறிமுகம் பின்னணியும்

வட இலங்கைக்கு 2500 ஆண்டுகளுக்கு குறையாத தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு என்பதனை அங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளும், வரலாற்று இலக்கியங்களும், தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களும் உறுதி செய்கின்றன. இலங்கை வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள் இலங்கையின் எல்லாப்பிராந்தியங்களையும், அவற்றின் வரலாற்றையும் தனித்து அடையாளப் படுத்திக் கூறவில்லை. ஆனால் பாளி இலக்கியங்களில் வடஇலங்கை பண்டு தொட்டு பிற்காலத்தில் வன்னி யாழ்ப் பாணம் என்ற பெயரைப் பெறுவதற்கு முன்னர் நாகதீப(ம்), உத்தரதேசம் என தனித்து அடையாளப்படுத்திக் கூறுவதன் மூலம் வடஇலங்கையின் வரலாற்றுப் பழமையும், அதன் தனித்துவமான பண்பாடும் தெரியவருகின்றது. கிறிஸ்துவிற்கு முற்பட்ட நூற்றாண்டுகளிருந்து நாகதீபம் எனவும் அதனைத் தொடர்ந்து உத்தரதேசம் எனவும் தனித்து வட இலங்கை அடையாளப்படுத்தப் பட்டதனை தொல்லியல் மூலாதாரங்களும், வெளி நாட்டு இலக்கிய குறிப்புகளும் மேலும் உறுதிப்படுத்து கின்றன. இவ் வட இலங்கையினுள் தற்போதைய யாழ்ப்பாணமும் உள்ளடங்கியிருந்தது என்பதனை 1936 இல் வல்லிபுரத்தில் கண்டுபிடிக்கப் பட்ட பிராமிச்சாசனம் உறுதி செய்கின்றது. இப் பெயர் 13ஆம் நூற்றாண்டு வரை யாழ்ப்பாணத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். 13ஆம் நூற்றாண்டிலிருந்து வடஇலங்கைக்கு உட்பட்ட பிராந்தியம் வன்னி, வன்னிப் பற்று எனவும், தற்போதைய யாழ்ப் பாணக் குடாநாடு யாப்பாபட்டுன, யாழ்பாணயன்பட்டினம் யாழ்ப்பாண தேசம், யாழ்ப்பாணம் என அழைக்கப் பட்டதை பாளி, சிங்கள தமிழ் இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் உறுதி செய்கின்றன (புஸ்பரட்ணம், 2011). 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் ஆட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து இலங்கையிலும், வடஇலங்கையிலும் புதிய நிர்வாக அலகுகள் ஏற்படுத் தப்பட்டன. அதிலும் பிரித்தானியர் ஆட்சியில் நிர்வாக வசதிக்காக வட இலங்கையில் ஏற்படுத்தப் பட்ட மாவட்ட நிர்வாக முறையால் அதன் எல்லைகள் காலத்திற்கு காலம் மாற்றியமைக்கப்பட்டு தற்போதைய வட இலங்கையில் ஓர் நிர்வாக அலகாக யாழ்ப்பாணம் மாற்றம்பெற்றிருந்தது. எனவே இலங்கை வரலாற்றில் புராதன காலம்தொட்டு தனக்கென தனித்துவமான பாரம்பரிய வரலாறு கொண்ட பிராந்தியமாக நாகதீபமும் அதனுள் அடங்கியிருந்த யாழ்ப்பாணமும் விளங்கியிருந்ததென்பதனை அறியமுடிகின்றது.

## மரபுரிமை சின்னங்கள்

மரபுரிமை என்பது ஒரு குழு அல்லது சமூகத்தால் கடந்த காலத்தில் பின்பற்றப்பட்டதும் நிகழ்காலத்தில் தொடர்ந்து பராமரிக்கப்படுவதும் எதிர் காலத்தில் அடுத்த சந்ததியினரிடம் பாது காத்துக் கொடுக்கப்பட வேண்டியதுமான விலைமதிக்க முடியாத சொத்துக்களாகும். மரபுரிமை உலகின் ஒவ்வொரு நாட்டினதும் அல்லது பிரதேசத்தினதும் வரலாற்றினை பிரதிபலிப்பவையாகவும் மிகப் பெறுமதி வாய்ந்த சொத்துக்களாகவும் விளங்குகின்றது. இலங்கை தொல்பொருள் திருத்த சட்டத்தின் (Antiquities amendment Act No. 24 of 1988) பிரகாரம் இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல், வரலாற்றுப் பெறுமதியுடைய காணிகள், கட்டடங்கள், மரங்கள் போன்றயாவற்றையும் மரபுரிமைச்சின்னங்களாக பிரகடனப்படுத்தி வருகின்றது. மரபுரிமையானது அதன் தன்மையைப்

பொறுத்து தொட்டுணரக் கூடிய மரபுரிமை (Tangible) தொட்டுணர முடியாத மரபுரிமை (Intangible) என இரு பிரிவாக பார்க்கப்படுகின்றது. இங்கு தொட்டுணரக் கூடிய மரபுரிமையின் அம்சங்களே தொல்லியல் மரபுரிமையாக பார்க்கப்படுகின்றது. தொல்லியல் மரபுரிமைகள் எனும் போது அவை அசையக் கூடிய மரபுரிமைச் சின்னங்கள் (Movable), அசைய முடியாத (Immovable) மரபுரிமைச் சின்னங்கள் என மேலும் இருவகையாக நோக்கப்படுகின்றது (Mandawala, 2011). இவ் மரபுரிமைச் சின்னங்களின் முகாமைத்துவ, பாதுகாப்பு நடவடிக்கையானது பல கட்டங்களை உள்ளடக்கிய படிமுறையான செயற்பாடாக அமைகின்றது. அவை,

1. அடையாளப்படுத்துதல்
2. ஆவணப்படுத்துதல் மற்றும் பதிவு செய்தல்
3. பாதுகாப்பு (Conservation), மீள் உருவாக்கம் போன்ற பொருத்தமான முகாமைத்துவ திட்டங்களுக்கு ஊடாக பாதுகாத்தல்,
4. தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு
5. முகாமைத்துவ நடவடிக்கைகளினூடாக பெறப்பட்ட விளைவுகளை ஆராய்தல் என்பனவாகும். மரபுரிமைச் சின்னங்களின் சிறந்த முகாமைத்துவ நடவடிக்கையானது அவற்றின் வாழ்நாளை அதிகரிக்கச் செய்யும் செயற்பாடாகவே அமைய வேண்டும்.

ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு செயன்முறையினூடாக அப்பிரதேசம் அரசியல், பொருளாதார, பண்பாட்டு ரீதியிலான பல நன்மைகளை பெற்றுக் கொள்ள வழிவகுக்க முடியும். அதிலும் அப் பிரதேசத்தின் பண்பாட்டு அடையாளத்தினை நிலைநிறுத்துவதில் கலாசார மரபுரிமைகளுக்கு முக்கிய பங்குண்டு. மரபுரிமைச் சின்னங்கள் பொதுவாக பழமையானவையாகவும், மதிப்பிட முடியததான பெறுமதி வாய்ந்தவையு மாகும். உலக மரபுரிமை பாதுகாப்பு தொடர்பாக 1972 ஆம் ஆண்டு யுனஸ்கோவினால் உலக கலாசார மற்றும் இயற்கை மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு தொடர்பாக நடாத்தப்பட்ட மாநாட்டின் பிரகாரம் (Convention – The Protection of the World Cultural and Natural Heritage, 1972) கலாசார மரபுரிமையானது நினைவுச்சின்னம் (Monument), கட்டிடத்தொகுதி (Groups of Buildings), தளம் (Site) என மூன்று பெரும்பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. Blondal (2003) என்பவர் மரபுரிமைச் சின்னங்களினை நினைவுச் சின்னம், கட்டிடங்கள், தொல்லியல் தளங்கள், வரலாற்று முக்கியத்துவம் கொண்ட சேகரிப்புக்களை உடைய அருங்காட்சியகங்கள் மற்றும் காட்சிக் கூடங்கள் என்பவற்றை உள்ளடக்கியதென வரையறை செய்துள்ளார்.

Herbert (1989), என்பவர் மரபுரிமையினை கலாசாரம், இயற்கை, கட்டிடங்கள் (Built environment) சார்ந்ததென முன்று பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளார். Peteet (2009), என்பவரது கூற்றின் படியும், நினைவுச்சின்னங்கள் மற்றும் தளங்களின் சர்வதேச சபை (ICOMOS), பட்டயத்தின் படியும் 1990 மரபுரிமைச் சின்னங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் படுகின்றது.

1. வரலாற்று, கலை, கட்டிடக்கலை, விஞ்ஞான, இனப்பண்பாட்டியல் பெறுமான கண்ணோட்டத் திலான நினைவுச் சின்னங்கள் (Monument),
2. வரலாற்று, கலை, விஞ்ஞான, சமூக, இனப்பண்பாட்டியல் பெறுமான கண்

ணோட்டத்திலான கட்டிடத் தொகுதிகள்

3. இனப்பண்பாட்டியல், மானிடவியல், அழகியல், வரலாற்று, தொல்லியல் பெறுமான கண்ணோட்டத்திலான தளங்கள் என்பவையாகும். இந்த மூன்று வகையான பிரிவுகளிலும் யாழ்ப்பாணத்தின் மரபுரிமை சொத்துக்களை இனங்காணமுடிகின்றது.

Blondal (2003) மற்றும் Barton (2000) ஆகிய இருவரும் ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் மரபுரிமைச் சொத்துக்களை விற்பனை செய்வ தென்பது சட்டத்திற்கு முரணான செயற்பாடாகும் என்பதுடன் இவ் சொத்துகள் அழிவிற்கே சிதைவிற்க்கே உட்பட்டால் திருப்பிப் பெற முடியதான பெறுமதியினை (Replacement Value) கொண்டவையென கூறியுள்ளனர். இவ்வாறே யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச் சின்னங்கள் பலகாலம் காலமாக சிதைவிற்க்குட்பட்ட நிலையிலும், முற்றாக அழிவடைந்த நிலையிலுமேயுள்ளது. உதாரணமாக இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன்பு நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண இரசாதானி ஒர் வலுவான அரசாக 250 ஆண்டுகள் நிலைத்திருந்த போதிலும் இவ் இராசதானிக்குரியதான கட்டிடங்கள் ஒன்றைத்தானும் முழுமையாக அடையாளம் காணமுடியாதுள்ளது. அதன் காரணமாக இப்பிரதேசம் தனது அடையாளத்தினை முழுமையாக இழந்துள்ளதென்றே கூறலாம். எனவே யாழ்ப்பாணத்தின் எஞ்சியுள்ள மரபுரிமைச் சின்னங்களினை தானும் அவற்றின் திருப்பிப் பெற முடியததான பெறுமதி கருதி பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இலங்கை தொல்பொருள் கட்டளைச் சட்டம் (Antiquities Ordinance No.09 of 1940 (Section 16,17,18 & 19), தேசிய கலாசார சொத்துச் சட்டம் (National Cultural Property Act-1988) and Burra Charter-1999 (The Australia ICOMOS Charter for Places of Cultural Significance) என்பவற்றின் பிரகாரம் மரபுரிமை சொத்துக்களை அடையாளப்படுத்தல், ஆவணப்படுத்தல் மற்றும் பதிவுசெய்தல் பற்றிய விபரங்கள், விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் பின்வரும் மரபுரிமைச்சின்னங்கள் (Gazetted) பதிவு செய்யப்பட்டுள்ளது. அவையாவன நாவலர் வீட்டுச் சுவர், வண்ணார் பண்ணை சிவன் கோவில், நாவலர் மகாவித்தியாலயம் பழைய கட்டிடமும், குரவர் கோவிலும், கதிரேசன் கோவில், பழைய கச்சேரி, யாழ் சென் ஜோன் மெதடிஸ் தேவலாயம், பழைய கச்சேரியிலுள்ள பழைய குளம், சென் மட்டின் மிசனறி கட்டிடம், யாழ்கோட்டை, நல்லூர் சென் ஜேம்ஸ் தேவலாயம், சங்கிலியன் தோப்பு அத்திவாரம், மந்திரிமனை, யமுனா ஏரி, சங்கிலியன் தோப்பு வளைவு, கின்னர் மண்டபம், யாழ்ப்பாண இந்துக் கல்லூரி பழைய சுவர், சைவ பிரகாச சபை, ஜம்புகோளப்பட்டினம், வட்டுக்கோட்டை தேவாலயம், சங்கானை ஒல்லாந்தர் தேவாலயம், கந்தரோடை பௌத்த தளம், சுன்னாக பொதுச் சந்தை, கந்தரோடை புராதன குடியிருப்பு மையம், நகுலேஸ்வரம், சிறாப்பர் மடம், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கே.கே.எஸ். வெளிச்ச வீடு, மயிலிட்டி போர்த்துக்கேய தேவாலயம், அச்சுவேலி ஒல்லாந்த தேவாலயம், அச்சுவேலி கிறிஸ்ரியன் தேவாலயம், நிலாவரைக் கிணறு, நவக்கிரி போர்த்துக்கேய தேவாலயம், உடுப்பிட்டி வீரபத்திரர் கோவில் ஆவுரஞ்சி சாசனம், வதிரி கணபதி கோவில் மடம், வதிரி முத்துக்குமார சுவாமி கோவில், அல்வாய்

மாயாக்கை வரலாற்றுக்கு முற்பட்டகால மையம், தெருமூடி மடம், அல்வாய் வடக்கு சென் பிரான்சிஸ் தேவாலயம், மணல்காட்டு தேவாலயம் என்பனவாகும்.

Feilden (1982) என்பவர் மரபுரிமை பாதுகாப்பு என்பது மரபுரிமைச் சொத்தினுடைய வாழ்நாளை அதிகரிக்க செய்யும் செயற்பாடாக அமைய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். 1964 ஆம் ஆண்டுக்குரிய நினைவுச் சின்னங்கள், தளங்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பிற்கான சர்வதேசசாசனமான வெனிஸ்பட்டயத்தில் (International Charter for the Conservation and Restoration of Monuments and Sites - Venice Charter, 1964 ) கூறப்பட்டுள்ள விடயங்கள் இலங்கையிலுள்ள மரபுரிமைச்சின்னங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. இவற்றினை அடிப்படையாகக் கொண்டே யாழ்ப்பாணத்தின் முக்கிய மரபுரிமைச் சின்னமான யாழ் கோட்டை மீள்புனரமைப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்களின் சர்வதேச சபையின் நியுஸ்லாந்து பட்டயம் (ICOMOS New Zealand Charter - 2010) மரபுரிமைச்சின்னங்களின் பாதுகாப்பு நடவடிக்கைக்கு வழிகாட்டியாக அமைவதுடன், முக்கிய குறிப்புக்களையும் தருகின்றது.

மரபுரிமைச் சின்னங்களின் பெறுமதியானது முறையான திட்டங்களுக்கேற்ப தொடர்ச்சியாக பராமரிக்கப்பட வேண்டும் என அவை பற்றிய விபரங்களை நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்களின் சர்வதேச சபையின் நியுஸ்லாந்து பட்டயம் (ICOMOS New Zealand Charter-2010)குறிப்பிடுகின்றது. யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச்சின்னங்களில் பல தொல்லியல் திணைக்களம், மத்திய கலாசார நிதியம் மற்றும் ஏனைய நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

### யாழ்பாணத்தின் மரபுரிமைச் சின்னங்கள்

இதுவரை யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச் சின்னங்கள் முழுமையான முகாமைத்துவ நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை என்றே கூறலாம். இலங்கையின் தொல்லியல் ஆய்வுகள் மற்றும் வரலாற்று முக்கியம் பெற்ற மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகள் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்திலிருந்தே தொடங்கப்பட்டிருந்தது. எனினும் இலங்கையின் ஏனைய பாகங்களோடு ஒப்பிடுகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இத்தகைய நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவில் இடம் பெற்றிருக்கவில்லை. ஐரோப்பியர் ஆட்சி முடிவடைந்த பின்னரான காலப் பகுதியினை தொடர்ந்து இற்றைவரை மரபுரிமைச் சின்னங்களின் முகாமைத்துவ நடவடிக்கைகள் பல்வேறு சூழ்நிலைகளால் யாழ்ப்பாணத்தில் முழுமையாக இடம்பெறவில்லை யெனலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசமானது கரையோரம் சார்ந்த பிரதேசமாக இருப்பதனால் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கால நடவடிக்கைக்குள் முழுமையாக உட்பட்ட பிரதேசமாக அமைந்திருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்கள் பல அழிக்கப்பட்டே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கால கோட்டைகள், தேவாலயங்கள், நிர்வாக மையங்கள் அமைக்கப்பட்டதனை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்கால ஆவணங்களும், யாழ்கோட்டை தொல்லியல் ஆய்வுகளில் வெளிக் கொணரப்பட்ட இந்துக் கட்டடக் கலைப்பாகங்கள், சுடுமண் உருவங்கள், கல்வெட்டுக்கள் என்பனவும் உறுதிப்படுத்துகின்றன. யாழ்

குடாநாட்டு மக்களிடையே தொல்லியல் சின்னங்களினை பாதுகாத்தல், அடையா ளப்படுத்துதல் தொடர்பிலான அக்கறை அல்லது போதிய விழிப்புணர்வின்மையும் மரபுரிமைச்சின்னங்களின் பேணிப்பாது காக்கப்படாமைக்கு ஒரு காரணமாகும். இவ்வாறாக ஐரோப்பியர் கால நடவடிக் கைகள், கடந்த உள்நாட்டு யுத்த சூழ் நிலை, மக்களிடையே மரபுரிமைச் சின்ன ங்கள் பற்றிய போதிய விழிப்புணர் வின்மை போன்ற பல்வேறு காரணங் களால் காலத்துக்கு காலம் யாழ்ப்பாணத் தின் மரபுரிமைச்சின்னங்கள் அழிவுக்குட் பட்டிருந்தன. இவ் அழிவிலிருந்து எஞ்சிய மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பில் எதிர்நோக்கும் பிரச்சனைகள், சவால்களே இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு குறையாத நீண்ட தொடர்ச்சியான வர லாறு கொண்ட பிரதேசமான யாழ்ப்பா ணம், யாழ்ப்பாண வலயம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதே சங்களை உள்ளடக்கியுள்ளது. இப்பிரதே சங்களில் காணப்படும் மரபுரிமை சின்னங் களினை பின்வருமாறு வகைப்படுத்த லாம்.

1. ஆதியிரும்புக்காலத்தில் இறந்தவர்களு க்காக அமைக்கப்பட்ட நினைவுச்சின்ன ங்கள் -கந்தரோடை, ஆனைக்கோட்டை

2. ஐரோப்பியர் வருகைக்கு முன்பிருந்து மக்கள் ஒன்று கூடும் இடங்களில் அமைக் கப்பட்ட மரபுரிமைச்சின்னங்கள் ஆவுர ஞ்சிக்கற்கள், சுமைதாங்கிக் கற்கள், மடங்கள்

3. இந்து, பௌத்த மதம் சார்ந்த மரபுரி மைச் சின்னங்கள் - நகுலேஸ்வரம், மாவிட்டபுரம், கந்தரோடை

4. அரச மரபு சார்ந்த மரபுரிமைச்சின்ன ங்கள் - மந்திரி மனை, சங்கிலியன் தோப்பு, யமுனா ஏரி, நாற்றிசைக் கோயில்கள்

5. ஐரோப்பியர் கால மரபுரிமைச்சின்ன ங்கள் - யாழ்கோட்டை, தேவாலயங்கள், நிர்வாக கட்டடங்கள் பாடசாலைகள், வெளிச்சவீடுகள்

யாழ்ப்பாணத்தின் மேற்கூறிய வகையிலான மரபுரிமைச் சின்னங்களினை இலங்கை தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் (Antiquities Ordinance No.09 of 1940 (Section 16,17,18 & 19) ) பிரகாரம் 40 மரபுரிமைச் சின்னங்கள் இற்றைவரை பதிவு செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டிய மரபுரிமைச் சின்னங்களாக அர சாங்கம் (Government Gazetted) அறிவித்து ள்ளது. இவ் பதிவு செய்யப் பட்ட மரபுரிமைச் சின்னங்களினைத்தவிர அடையாளப்படுத்தப்பட்ட நிலையிலும், அடையாளப்படுத்தப்படாத நிலையிலும் பதிவு செய்யப்படாத மரபுரிமைச்சின்ன ங்களே எண்ணிக்கையில் அதிகமான தாகும்.

## ஆய்வின் நோக்கம்

1. யாழ்ப்பாணத்தின் முக்கிய அடையாள மாகிய கலாசார மரபுரிமைச்சின்னங்க ளின் பாதுகாப்பில் எதிர்நோக்கும் பிரச் சனைகள், சவால்களை இனங்காணுதல்.

2. பெறுமதிவாய்ந்த இவ் மரபுரிமைச் சின்னங்களின் முறையான பாதுகாப்பிற் காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை கண்டறிவது என்பன இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

## ஆய்வு வினாக்கள்

யாழ்ப்பாணத்தின் தொல்லியல் மரபுரிமை சின்னங்களைப் பாதுகாப்பதில் எதிர்ப்படும் சவால்கள் எனும் தலைப் பிற்கு பின்வருவன ஆய்வு வினாக்களாக அமைகின்றன.

1.யாழ்ப்பாணத்தின் தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் சிறந்த திட்டமிடலின் அடிப்படையில் பாதுகாக்கப்பட்டுள்ளதா?

2.இதுவரை யாழ்ப்பாணத்தின் தொல்லியல் மரபுரிமைச்சின்னங்கள் பாதுகாக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை?

ஆய்வு முறையியல்

யாழ்ப்பாண கலாசார மரபுரிமை சின்னங்களின் பாதுகாப்பில் எதிர் நோக்கும் பிரச்சனைகள் பற்றிய ஆய்வானது தொல்லியல் களவாய்வினை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே தொல்லியல் களவாய்வே இவ்வாய்வின் பிரதான ஆய்வு முறையியலாகும். இவ் களவாய்வினூடாக மரபுரிமைச் சின்னங்கள் நேரடி அவதானிப்பிற்கு உட்படுத்தப் பட்டதுடன், அவற்றின் தற்போதைய நிலை, சிதைவிற்கான காரணங்கள் என்பவை கண்டறியப்பட்டன. மேலும் அவ் மரபுரிமைச் சின்னம் தொடர்பானவர்களிடமிருந்து (பிரதேச மக்கள், தொல்லியல் திணைக்களம், காணி உரிமையாளர்கள்) நேர்காணல் ஊடாகவும் தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகளாக இலக்கியங்கள், ஆய்வுக் கட்டுரைகள், மற்றும் தேசிய, சர்வதேச மரபுரிமைச் சட்டமூலங்கள், மரபுரிமை பட்டயங்கள் (Charter) என்பன இவ்வாய்விற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே இவ் முதலாம், இரண்டாம் நிலைத்தர தரவுகள், தகவல்கள் என்பனவும் பகுப்பாய்வு முறையினூடாக இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வுமுடிவுகளும், முன்மொழிவுகளும்

களஆய்வின் ஊடான அவதானிப்புக்களையும், நேர்காணல் ஊடாக பெறப்பட்ட தகவல்களினையும், தரவுகளையும் ஆராய்ந்து பார்க்கும் போது யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச் சின்னங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்பல இனங்காணப்பட்டுள்ளன. இவ் பிரச்சனைகள் நிர்வாகம், சமூகம், வளங்கள், இயற்கை சார்ந்த வகையில் நான்கு பெரும் பிரிவுகளாக காணப் படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச்சின்னங்கள் நிர்வாகம் சார்ந்து எதிர்நோக்கும் சவால்கள்

1.அரசியல் சூழ்நிலை– ஓர் இனம் (ethnic group), மதம் சார்ந்த வகையில் மரபுரிமைகளை அடையாளம் காணல்.

2.பதிவு செய்யப்படாமை– யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்பட்ட (Gazetted) மரபுரிமைச் சின்னங்களினை விட பதிவு செய்யப்படாத மரபுரிமைச் சின்னங்களே எண்ணிக்கையில் அதிகமானதாகும்

3.காணி உரிமை – மரபுரிமை சின்னங்கள் அமைந்திருக்கும் காணி தனியாருக்கு சொந்தமாக இருத்தல்.

4.திட்டமிடல் - மரபுரிமை பாதுகாப்பு பற்றிய சிறந்த திட்ட மிடலின்மை

5.ஒருங்கிணைந்த செயற்பாடு – வட இலங்கை மரபுரிமை பாதுகாப்பில் கொள்கைகள், நோக்கங்களின் அடிப்படையில் அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து செயற்பட முடியாமை, மரபுரிமை பாதுகாவலர்களிடையே ஒருங்கிணைந்த செயற்பாடின்மை.

6.பராமரிப்பு – மரபுரிமைச் சின்னங்கள் முறையாக பராமரிக் கப்படாமை

7.மரபுரிமைச் சின்னங்கள் அமைந்த இடங்களில் குடியிருப்புகள், தொழிற்சாலைகள், நிர்வாக மையங்கள் காணப்படுதல்

யாழ்பாண மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனையானது நிர்வாகம் சார்ந்ததாகும். இவ் மரபுரிமைச் சின்னங்களில் பல இலங்கைத் தொல்லியல் சட்டத்தின் பிரகாரம் தொல்லியல் திணைக்களத்தின் கீழ் முகாமை செய்யப்படுகின்றதெனினும் பதிவு செய்யப்பட்ட (Gazetted) மரபுரிமைச் சின்னங்களினை விட பதிவு செய்யப் படாத மரபுரிமைச் சின்னங்களே எண்ணிக்கையில் அதிகமானதாகும். மரபுரிமை சார்ந்த அமைச்சும், தொல்லியல் திணைக்களமே இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பில் அதியுயர் அதிகாரம் பெற்ற நிறுவனங்களாகும். தொல்லியல் திணைக்களம் இலங்கையில் 250 000 க்கு மேற்பட்ட மரபுரிமைச் சின்னங்களினை அடையாளப்படுத்தியும், அவற்றில் பலவற்றினை பதிவு செய்துமுள்ளது. இவை அனைத்தையும் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்க்கு உட்படுத்துவ தென்பது இயலாத காரியமாகும். எனவே தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் குறிப்பிட்ட மரபுரிமை மையம் சார் பிரதேச மக்கள், சமய, சமூக, தனியார் நிறுவனங்களூடாக அவற்றினை பாதுகாப்பதே பொருத்தமானதாகும். வட இலங்கையினைப் பொறுத்த வரையில் இலங்கைத் தொல்லியல் திணைக் களத்துடன் இணைந்து மரபுரிமைகளை பாதுகாப்பதென்பது சுலபமான செயற் பாடாக அமைவதில்லை. வேறுபட்ட கொள்கைகள், நோக்கங்கள், அரசியல் கருதுகோள்கள், மொழி என்பன இவற்றில் செல்வாக்கு பெறுகின்றன.

இலங்கையின் ஆரம்பகால தொல்லியல் ஆய்வுகள் பழமையைக் கண்டறிய வேண்டும் என்ற ஆர்வத்தினால் முன்னெடுக்கப்பட்ட போதும் காலப் போக்கில் உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் இனம், மதம், மொழி, பண்பாடு, நாகரிகம் என்பவற்றின் பரந்து பட்ட தொன்மையிலும் அவற்றின் வளர்ச்சி நிலையிலும் அதனோடு ஒட்டிய இனங்களிற்கு சமூக அந்தஸ்து, அரசியல் அங்கீகாரம், தேச கட்டுமானம் என்பன அங்கீகாரமாக கிடைத்ததனால் ஒவ் வொரு இனமும் தாம் சார்ந்த இனம், மதம் பண்பாட்டை தொல்லியல் வரலாற்று ஆய்வுகள் மூலம் முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். அந்தவகையில் இலங்கையில் தமிழ், சிங்கள மொழி இனம் பற்றிய தொன்மையும், அடையா ளங்களும் அரசியல் தேவை கருதி நிருப்பிப்பதற்கு தொல்லியல் மரபுரிமை களை முக்கிய மூலதாரமாக பயன்படுத்தத் தொடங்கினர். உதாரணமாக யாழ்ப்பாண பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்படும் பௌத்தமத கட்டிட, சிற்பக்கலை மரபுகள் மற்றும் வல்லிபுர பொற்சாசனம் போன்ற தொல்லியல் எச்சங்களை ஒர் மதத்திற்குரிய அடையாளமாக பார்க்காது ஒர் இனம் சார்ந்த வகையில் அடையாளப்படுத்துவதனைக் குறிப்பி டலாம்.

இலங்கை தொல்லியல் திணைக் களத்துடன் இணைந்த வகையில் மரபுரிமை பாதுகாப்பு தொடர்பான செயற்பாடு, திட்டமிடல் நடவடிக் கையில் ஈடுபடுவதென்பது யாழ்ப் பாணத்தை பொறுத்த வரையில் ஒரு சவாலான செயற்பாடகவே அமைகின் றது. பொதுவாக ஒர் இன, மதம் சார்ந்த வகையில் கலாசார மரபுரிமை களை அடையாளப்படுத்தும் கொள்கையும் யாழ்ப்பாண மரபுரிமை பாதுகாப்பு எதிர் நோக்கும் பாரிய பிரச்சனையாகும். தொல்லியல் திணைக்களம் வட இலங்கையில் பௌத்த மத மரபுரிமை -களை பாதுகாப்பதில் காட்டும் தீவிரத்

தன்மையினை யாழ்ப்பாண இராசதானி, இந்து மதம் சார்ந்த மரபுரிமைகளை பாதுகாப்பதில் காட்டுவதில்லை என் பதும் சுட்டிக்காட்டதாகும். குறிப்பாக இலங்கையின் பண்டைய இராசதானி களான அநுராதபுரம், பொலனறுவை கைவிடப்பட்டு 1000 ஆண்டுகளை கடந்த போதிலும், அவ்விடங்கள் உலக மரபுரிமை மையங்களாக பிரகடனப் படுத்தப்பட்டு இன்றும் பாதுகாக் கப்பட்டு வருகின்றது. ஆனால் இற்றைக்கு 398 ஆண்டுகளுக்கு முன்னர் கைவிப்பட்ட நல்லூரை தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண இராசதானிக்குரிய நினைவுச் சின்னங்கள் ஒன்றுதானும் முழுமையாக பாதுகாக்கப் படவில்லை என்பது யாழ்ப்பாண மரபுரிமை பாதுகாப்பில் அரசியல் சூழ்நிலை ஏற்படுத்தும் தாக்கத்தினையே எடுத்துக் காட்டுகின்றது. இலங்கைத் தொல்லியல் சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள் உட்பட யாழ்ப்பாணத்தின் பல மரபுரிமைச் சின்னங்கள் தனி நபருக்கும், குறிப்பிட்ட சமூக, சமய நிறுவனங்களுக்கும் செந்தமாக உள்ளமை மரபுரிமை சின்னங்களின் பாதுகாப்பு எதிர் நோக்கும் பிரச்சனையாகும். உதாரண மாக யாழ்ப்பாண இராசதானிக்குக் குரியதென அடையாளப்படுத்தப்படும் முக்கிய மரபுரிமைச் சின்னமான மந்திரி மனை பதிவு செய்யப்பட்ட மரபுரிமைச் சின்னமாக இருப்பினும் அவ் மரபுரிமைச் சின்னம் அமையப் பெற்றிருக்கும் காணி பதிவு (Gazetted) செய்யப்படாமையானது அதன் பாதுகாப்பிலும், நிர்வாகத்திலும் சிக்கல் தன்மையை உருவாக்கியுள்ளது. இவ் மரபுரிமை கட்டத்திற்கு அருகாமையில் பாரவூர்திகள் தரித்து நிற்பது அதிர்வு ரீதியிலான மரபுரிமை சிதைவிற்க்கு காரணமாக அமைகின்றது. இதனாலேயே இக்காணி பிரச்சனை யானது தீர்வினை பெறும் பொருட்டு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. காணி உரிமை பிரச்சனைக்கு இன்னொரு உதாரணமாக கந்தரோடை புராதன குடியிருப்பு பிரதேசத்தினைக் குறிப்பிட முடியும். யாழ்ப்பாணத்தின் மரபுரிமை சின்னங்களின் பாதுகாப்பில் தொல்லியல் திணைக்களம், மத்திய கலாசார நிதியம், பிரதேச செயலகங்கள், சமய, சமூக, கல்வி நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் என வேறுபட்ட அதிகாரத்தினை உடையவர் கள், வேறுபட்ட அணுகுமுறையினைக் கொண்டுள்ளமையும் ஒருங்கிணைந்த திட்டமிடல் ரீதியிலான மரபுரிமை பாதுகாப்பு எதிர்நோக்கும் பிரச்சனை யாகும். யாழ்ப்பாணத்தின் பதிவுசெய்யப் பட்ட, அடையாளப்படுத்தப்பட்ட, அடையாளப்படுத்தப்பட்டு வருகின்ற அனைத்து மரபுரிமைச் சின்னங்களும் முறையான பராமரிப்பு முகாமைத்து வத்திற்க்கு உட்படுத்தப்படாமல் உள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்க தாகும்.

இவ்வாறாக யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனையானது அதன் நிர்வாகத்திலேயே பெரும்பாலும் தங்கியுள்ளது. அதன் முதற்கட்டமாக இங்கு காணப்படும் முக்கிய மரபுரிமைச் சின்னங்கள் யாவற்றினையும் பதிவு செய்வதற்கான (Gazetted) நடவடிக்கை களை முன்னெடுத்தல், மரபுரிமை சின்னங்களை பாதுகாப்பதற்க்கு அரச மட்டத்திலான நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தலும், ஆதரவும், நிறுவன அமைப்புகள், இப்பிரதேசம் சார் அமைப்புக்கள் மரபுரிமைகளை பாதுகாப் பிற்கு கொடுக்கப்பட வேண்டிய முக்கிய த்துவம் மற்றும் முயற்ச்சிகள், மரபுரிமை அமைச்சு, தொல்லியல் திணைக்களம், மத்திய கலாசார நிதியம், ஏனைய

அரசாங்க நிறுனங்கள், சமூக, சமய, கல்வி சார் அமைப்புக்கள் என்பன ஒன்றினைந்து செயற்படக் கூடியவகையிலான சூழலை உருவாக்க முன்வருதலும், பொதுவான நோக்கங்கள், இலக்குகள், கொள்கை களின் அடிப்படையில் செயற்படும் தன்மையினை உருவாக்குதல், உள்ளூர் மக்களையும் மரபுரிமை பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தல், பிரதேசம் சார் மரபுரிமை பாதுகாப்பு அமைப்பு, கழகங்களை உருவாக்குதலும் அவற்றின் முறையான திட்டமிடல் நடவடிக்கைகள், காணி உரிமையாளர்கள், ஏனைய மரபுரி மை பங்காளர்களிடையே இணைந்த செயற்பாட்டினை கட்டியெழுப்புதல், நாளாந்த, வார, மாத, ஆண்டு ரீதியிலான மரபுரிமைப் பாதுகாப்பு திட்டங்களை கொண்டி ருத்தல், ஆய்வு கூடங்கள், சிறந்த கட்சிப்படுத்தல் கூடங்கள், களஞ்சிய அறைகளுடன் கூடியதான அருங்காட்சிய கங்களினை அமைத்தல் போன்ற நடவடிக் கைகளினூடாக மரபுரிமை சின்னங்களின் பாதுகாப்பினை எதிர்காலத்தில் உறுதிப் படுத்திக் கொள்ள முடியும்.

**யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச்சின்னங்கள் சமூகம் சார்ந்து எதிர்நோக்கும் சவால்கள்**

1.உள்ளூர் சமூகம் - புதிய அபிவிருத்தி திட்டங்கள், வீதி அகலிப்பு நடவடிக் கை,வேறுபட்ட இன (ethnic), கலாசார அடையாளங்கள், பங்களிப் பின்மை, குடியிருப்புக்களின் பரவல், விழிப்புணர் வின்மை, செயற்பாடுகள் - வாகன இரை ச்சல், அதிர்வு, வாகன தொழிற்சாலை புகைகள், கழிவுகள், அறியாமை, நம்பிக்கைகள், அத்துமீறல்.

2.சுற்றுலா பயணிகள் - செயற்பாடுகள், தொகை அதிகரிப்பு சமூகம் சார்ந்து எதிர்நோக்கும் பிரச்சனைகள் மரபுரிமை அழிவிற்கு முக்கிய காரணமாகும். மரபுரிமை பிரதேசம் சார் புதிய அபிவிருத் திட்டங்கள் குறிப்பாக விடுதிகள், ஹோட்டல்கள், கடைகள், அரச, தனியார் கட்டடங்கள் போன்ற நோக்கங் களுக்கான பாரிய, அடுக்குமாடி கட்டிடங்களின் தோற்றமானது குறித்த மரபுரிமைச் சின்னத்தினையும், அதன் சூழலையும் பாதிப்புக்குள்ளாகின்றது. மரபுரிமைச் சின்னங்களுக்கு அண்மையில் அல்லது அவை சார்ந்த சூழலில் கட்டிடங்கள் அமைத்தல், குடியிருப்புக் களின் தோற்றம் என்பன மரபுரிமை பாதுகாப்பு சட்டவிதிகளுக்கு அமைய தடை செய்யப்பட்டிருப்பினும் அத்து மீறிய வகையிலும், மரபுரிமைச் சின்னம் பதிவு செய்யப்படாத நிலையிலும் இவ்வாறான புதிய அபிவிருத்திட்டங்கள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகி ன்றன. இவற்றுக்கு சில உதாரணங்களாக, யாழ்ப்பாணத்தின் முக்கிய மரபுரிமைச் சின்னங்களான யாழ்கோட்டை, யாழ்ப் பாண இராசதானிக்குரிய மரபுரிமைகள், பழைய கச்சேரி என்பவற்றைக் குறிப்பி டலாம். யாழ்ப்பாண இராசதானிக் குரியதாக அடையாளப்படுத்தப்படும் நல்லூர் பிரதேசமானது நெருங்கிய குடியிருப்பு பிரதேசமாக மாறியுள்ளமை யாழ்ப்பாண மரபுரிமை பாதுகாப்பு எதிர்நோக்கும் பாரிய பிரச்சனையாகும். இவ் பிரதேசத்தில் யாழ்ப்பாண இராச தானிக் குரியதான மரபுரிமைச்சின்ன ங்கள், செங்கற்களிலான அத்திவாரக் கட்டிடங்கள் பல அடையாளப் படுத்தப் பட்டுள்ளமையும் சுட்டிக் காட்டத்தக்க தாகும். பழைய கச்சேரிக்கு தெற்குப் புறமாக 50 அடிக்கு அப்பால் வட மாகாண ஆளுநருக்குரிய இரண்டுமாடி கட்டிடம் அமையப் பெற்றிருப்பதானது அவ் மரபுரிமைச் சின்னமும், அதன் சுற்றுச் சூழல் பெறுமானமும் பாதிப்படை கின்றது. யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் குறிப்பிட்டுச் சொல்லக்

கூடியதான வீதி அபிவிருத்தியும் மரபுரிமைச் சின்னங்களின் சிதைவிற்க்கு காரணமாக அமைகின்றன. குறிப்பாக மடங்கள், சுமைதாங்கிக் கற்கள், ஆவுரஞ்சிக் கற்கள், ஆலயங்கள் போன்ற வீதியோர மரபுரிமைச்சின்னங்களே இவ் நடவடிக்கையில் முழுமையான பாதிப் பினை சந்தித்துள்ளதெனலாம். நகரமய மாக்கல் காரணமாக அதிகரித்த போக்கு வரத்து நெரிசல், புகை, கழிவுகள் என்பனவும் மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு எதிர்நோக்கும் சாவாலாகும். காலங் காலமாக யாழ்ப்பாணத்தின் மரபுரிமை பாதுகாப்பு எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனையானது மக்களிடையே மரபுரிமை என்றால் என்ன? அதனை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம், அதன் பெறுமானங்கள் பற்றிய விழிப் புணர்வின்மையும், அறியாமையுமாகும். இதன் காரணமாக மரபுரிமைச் சின்னங் களினை பாதுகாக்க தவறிவிடுவ தோடு அவற்றினை வருமானம் தேடும் நோக் கோடு விற்பனைப் பொருளாகவும் மாற்றி விடுகின்றனர். மரபுரிமைக் கட்டிடங்கள் பலவற்றின் கதவுகள், யன்னல்கள், மரத்திலான கூரைப் பகுதிகள், சிற்பங்கள், விக்கிரகங்கள் போன்ற பல பெறுமதி வாய்ந்த மரபுரிமை சின்னங்கள் கடந்தகாலத்தில் திருட்டுப் போயிருப்ப தோடு அவற்றில் பல வேறு பிரதேசங்க ளுக்கு கடத்தப் பட்டுள்ள தனையும் அவதானிக்கலாம். தொன்மையான பல கட்டிடங்கள் மீள் கட்டுமானம், அபிவி ருத்தி என்ற பெயரில் நவீனமயப்படுத்த ப்பட்டு பழமையான கட்டிடப்பாகங்கள் பல தென்னிலங்கை வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதனையும் காணமுடிகின்றது. இதன் காரணமாக யாழ்ப்பாணப் பிரதேசமானது தனது அடையாளத்தினை பெரிதும் இழந்துள்ள தென்றே கூறலாம். இதுமட்டுமன்றி பெறுமதி வாய்ந்த தொல்லியல் எச்சங்கள் பலவும் விற்பனைப் பொருளாக பார்க் கப்பட்டு வருவதனை கந்தரோடை பிரதேசங்களில் பழமையான நாணயங்கள் வருமானம் தேடும் நோக்கோடு அதிக பணத்திற்கு வெளிநாட்டவர்களுக்கு விற்க் கப்பட்டு வருவதனை உதாரணமாக குறிப்பிடலாம். இப் பிரதேச மக்களி டையே கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஆழமான சமய நம்பிக்கைகள் காரணமாக ஏனைய மத அடையாளங்களை பாது காப்பதில் அக்கறை செலுத்தாத தன்மை யினையும் காணமுடிகின்றது. இவ்வாறாக மரபுரிமைச் சின்னங்கள் பற்றிய போதிய விழிப்புணர்வின்மை, அறியாமை, அத்து மீறிய செயற்பாடுகள் காரணமாக யாழ்ப் பாணத்தின் மரபுரிமைச் சின்னங்கள் அழி விற்குட்பட்டு வருவதனை காணலாம்.

சுற்றுலாப் பயணிகளின் செயற் பாடுகளும் மரபுரிமை பாதுகாப்பு எதிர்நோக்கும் பிரச்சனைகளில் ஒன்றாக அமைகின்றது. யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச் சின்னங்கள் முறையான பாரமரிப்பு, கண்காணிப்பிற்கு உட்படாமையினால் இலகுவாக சுற்றுலா பயணிகளின் செயற்பாடுகள் மரபுரிமை சிதைவிற்க்கு காரணமாக அமைகின்றது. மரபுரிமைக் கட்டிடங்களில் கீறுதல், எழுதுதல், சிதைவிற்க்குற்பட்ட பகுதிகளில் ஏறுதல், நடத்தல், அழுத்துதல், பிளாஸ்ரிக்பைகள், போத்தல்கள், ஏனைய கழிவுகளினை மரபுரிமை சார் பிரதேசங்களில் வீசுதல், சுற்றுலாப் பயணிகளை நோக்காக கொண்டு தோற்றம் பெறும் சிறு கடைகள் என்பன மரபுரிமைச் சின்னமும், அதன் சுற்றாடலும் பாதிப்படைய காரண மாகின்றன. சுற்றுலா பயணிகளின் அதிகரித்த வருகையும் மரபுரிமை சின்னம் சிதைவடைய காரணமாக அமைகின்றது. காலத்தின் தேவைக்கேற்ப புதிய அபிவிரு

த்திச் செயற்பாடுகள் தவிர்க்க முடியாதிருப்பினும் மரபுரிமை சார் பெறுமானங்களை கருத்தில் கொண்டு அவை முன்னெடுக்கப்பட வேண்டும். புதிதாக அமைக்கப்படும் விடுதிகள், ஹோட்டல்கள், கடைகள், ஏனைய கட்டிடங்களின் அமைவிற்க்கு எதிராக இறுக்கமான சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், அத்துமீறி அமைக்கப்படும் கட்டிடங்களை அகற்றுவதற்க்குமான நடவடிக்கை, வீதி அகலிப்பினுள் உள்வாங்கும் மரபுரிமைச் சின்னங்களை அதன் பெறுமதி குறையாதவண்ணம் இன்னொரு இடத்தில் அமைத்தல், இப்பிரதேசம் சார் மக்களுக்கு மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு தொடர்பான விழிப்பூட்டல், மரபுரிமை முக்கியத்துவம், அவை பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் என்பவற்றை தெளிவுபடுத்தும் விதமான கருத்தரங்குகள், கண்காட்சிகள் நாடத்துதல் மற்றும் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றினூடாக மக்களை சென்றடையக் கூடிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தல், இளைய சமுதாயத்தினருக்கு மரபுரிமை விழிப்புணர்வை உருவாக்கும் செயற்பாடுகளை பாடசாலை மட்டங்களிலேயே முன்னெடுத்தல், தொல்லியல் சட்டங்களை பொதுமக்களுக்கு தெளிவு படுத்துதல், சுற்றுலா பயணிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் விதமாக சிறந்த கண்காணிப்பு, பராமரிப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்துதல் குறிப்பாக காவலாளர்கள், பராமரிப்பு உத்தியோகத்தர்களை நியமித்தல், அறிவிப்பு பலகைகளை அமைத்தல், கழிவுகளை சிறந்த முறையில் அகற்றுவதற்காக குப்பைத்தொட்டிகளை அமைத்தல், சுற்றுலாப் பயணிகளுக்குரிய வசதியினை ஏற்படுத்துதல், மரபுரிமைச் சின்னத்தினை பாதிக்கதவாறு நடைபாதைகள், பாதுகாப்பு வேலிகளை அமைத்தல், சுற்றுலாப் பயணிகளுக்கான நுழைவுச் சீட்டுக்களை அறிமுகம் செய்தல் போன்ற நடவடிக்கைகளினை உள்வாங்கி எதிர்கால மரபுரிமை பாதுகாப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்படுமாயின் யாழ்ப்பாணத்தின் மரபுரிமை அழிவினை ஒரளவு கட்டுப்படுத்த முடியும்.

**யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச்சின்னங்கள் வளங்கள் சார்ந்து எதிர்நோக்கும் சவால்கள்**

1.மனித வளம் - நிபுணர்கள், அறிவு, பயிற்சித் திறமை பற்றாக்குறை.

2.நிதி வளம் - நிதி பற்றாக்குறை, நிதி திட்டமிடலின்மை, தனிப்பட்டவர்கள், தனியார் நிறுவனங்களின் பங்களிப்பின்மை

3.தொழிநுட்பம் - மரபுரிமைப் பாதுகாப்பிற்கு தகுந்த தொழிநுட்ப கருவிகள், உபகரணங்கள், தொழினுட்ப அறிவு பற்றாக்குறை

யாழ்ப்பாண மரபுரிமைச் சின்னங்களில் பெரும்பான்மையானவை அழிவடையும் நிலையிலிருந்தாலும் மனித, நிதி, தொழில் நுட்ப பற்றாக் குறையினால் அவற்றை முறையாக பாதுகாக்க முடியாதுள்ளது. வட இலங்கை குறிப்பாக யாழ்ப்பாணத்தினைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழகங்களில் மரபுரிமை முகாமைத்துவ கற்கை நெறிகள், தொல்லியல், கலாசார கற்கைநெறிகள் என்பன மிக அண்மைக்காலத்திலிருந்தே கற்பிக்கப்பட்டு வருவதுடன், இத் துறை சார்ந்த பட்டமேற்படிப்புக்களும், பயிற்சியுடன் கூடிய கற்கை நெறிகளுக்குமான வசதி, வாய்ப்புக்கள் இல்லாதிருப்பதும், மரபுரிமை பாதுகாப்பு நிபுணர்கள், உத்தியோகத்தர்கள் மிக மிக குறைவாக உள்ளமையும் மரபுரிமை பாதுகாப்பு எதிர்நோக்கும் பிரச்சனை

யாகும். இதன் காரணமாக யாழ்ப்பாணத்தின் மரபுரிமை பாதுகாப்பில் தகுதிவாய்ந்த நிபுணர்கள், தொழிநுட்பவியலாளர்களை ஈடுபடுத்துவதற்காக வெளிநாட்டு, தென்னிலங்கையினைச் சேர்ந்தவர் களையே நாட வேண்டியுள்ளது.

யாழ்ப்பாண மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு முகாமைத்துவம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனை நிதி வளப்பற்றாக்குறை, நிதி திட்டமிடலின்மை போன்றவற்றிலேயே பெரும் பான் மையாக தங்கியுள்ளது. பொதுவாக மரபுரிமை முகாமைத்துவம் மற்றும் மீள் புனரமைப்பு, பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு பாரிய நிதி வளங்கள் தேவைப்படுவதனால் அவற்றினை பெற்றுக்கொள்வதென்பது ஒரு சவாலான செயற்பாடாகவே அமைகின்றது. அரசாங்கம் மரபுரிமை அமைச்சினூடாக தொல்லியல் திணைக்களத்திற்கு ஒதுக்கப்படும் நிதியானது பெரும்பாலும் யாழ்ப்பாணத்தின் மரபுரிமை பராமரிப்பு செயற்பாடுகளுடனேயே நின்று விடுகின்றது. குறிப்பாக வட இலங்கையில் கடந்த எட்டு வருடங்களாக தொல்லியல் திணைக்களம் தனது செயற்பாடுகளை மேற்கொண்டிருந்த போதிலும் குறிப்பிட்டு சொல்லக் கூடிய வகையில் யாழ்கோட்டை மட்டுமே நெதர்லாந்து அரச நிதியுதவியுடன் மீள்புனரமைப் பிற்கு உட்படுத்தப் பட்டுள்ளதுடன் தற்போது நிதிபற்றாக் குறை காரணமாக யாழ்கோட்டையின் சில பகுதிகளின் பராமரிப்பு முகாமைத் துவம் மத்திய கலாசார நிதியத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். சமூக, சமய, கல்வி சார் நிறுவனங்களும் சிறந்த நிதி திட்டமிடலின்மை காரணமாக மரபுரிமை பாதுகாப்பில் ஈடுபடுவது மிக குறைவாக வேண்டியுள்ளது. குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வகையில் யாழ் மாநகரசபையானது கடந்த ஆண்டுகளில் மரபுரிமை பாதுகாப்பு தொடர்பான ஓர் கழகத்தினை உருவாக்கிய போதிலும் அக்கழகம் பெயரளவில் தான் உருவாக்கப்பட்டிருந்தது. அதனூடாக மரபுரிமை பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கான வளங்கள், அதிகாரங்கள் காணப்பட்டிருந்த போதிலும் செயற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

யாழ்ப்பாண மரபுரிமைச் சின்னங்களின் முகாமைத்துவம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனை தொழிநுட்ப பற்றாக் குறையாகும். Conservation, மீள்புனரமைப்பு, அகழ்வாய்வு நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையிலான தொழிநுட்ப அறிவு, தொழிநுட்ப கருவிகள் குறைவாகவேயுள்ளது. உதாரணமாக தொல்லியல் ஆய்வு நடவடிக்கையினூடாக பெறப்பட்ட மரபுரிமை எச்சங்கள் (மட்பாண்டம், சிற்பங்கள், எலும்புகள்...) தொழிநுட்ப கருவிகள், வசதிகள் இன்மை காரணமாக எந்தவித பாதுகாப்பு, பராமரிப்பு முகாமைத்து வத்திற்கு உட்படுத்தப் படாமல் யாழ்ப்பாணத்தின் அருங்காட்சியகங்களில் அவதானிக்கப் பட்டமையினைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக யாழ்ப்பாண மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு எதிர்நோக்கும் பிரச்சனை மனித, நிதி, தொழிநுட்ப வளப் பற்றாக்குறையிலேயே பெரும்பாலும் தங்கியுள்ளது. இதனால் இவ் மரபுரிமைச் சின்னங்களினை பாதுகாப்பதற்கு தேவையான மனித வளத்தினை அதிகரித்தல் குறிப்பாக பல்கலைக்கழக மட்டத்தில் மரபுரிமை பாதுகாப்பு தொடர்பான கற்கை நெறிகளை பயிற்சியுடன் (விஞ்ஞான, தொழிநுட்பத் துறையுடன் இணைந்த வகையில்) கூடியதாக அறிமுகம் செய்தல், மரபுரிமை பாதுகாப்பு தொடர்பான

கருத்தரங்குகள் மற்றும் பயிற்ச்சிகளை பல்வேறு மட்டங்களில் நடாத்துதல், அரச, தனியார் ரீதியாக நிதிகளை பெற ஆவண செய்தல், மரபுரிமை பாதுகாப்பு நடவடிக்கையில் உள்ளூர் மக்களையும் ஈடுபடுத்தல், பிரதேசம் சார் மரபுரிமை பாதுகாப்பு அமைப்பு, கழகங்களை உருவாக்குதலும் அவற்றின் முறையான திட்டமிடல் நடவடிக்கையினூடாக நிதியினை பெற்றுக்கொள்ளுதலும், காணி உரிமையாளர்கள், ஏனைய மரபுரிமை பங்காளர்களிடையே இணைந்த செயற் பாட்டினை கட்டியெழுப்புதல், மரபுரி மை பாதுகாப்பு தொடர்பான தொழி நுட்ப கற்கைநெறிகளினை பல்கலைக் கழக மட்டத்தில் அறிமுகம் செய்தல், பயிற்சி வாய்ப்புக்களை வழங்க ஆவண செய்தல் போன்ற நடவடிக்கைகளினூ டாக எதிர்கால மரபுரிமை பாதுகாப்பிற்கு ஆவண செய்ய முடியும்.

**யாழ்ப்பாணத்தின் மரபுரிமைச்சின்னங்கள் இயற்கை சார்ந்து எதிர்நோக்கும் சவால்கள்**

1. காலநிலை – வெப்பம், மழை, காற்று, கடல் உயர்ச்சி, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அழிவுகள்.
2. தாவரம் - பெரியமரங்களின் வேர்களின் ஊடுருவல், பாசி, சிறிய செடி, கொடி பற்றைக் காடுகளின் வளர்ச்சிப் பரவல்
3. விலங்கு - நுண்ணுயிர்களின் வளர்ச்சி, பறவைகள், கால்நடைகள், எறும்பு, கறையான், வெளவால் போன்ற வற்றின் தாக்கம்

யாழ்ப்பாண மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு எதிர்நோக்கும் முக்கிய சவாலானது இயற்கை சக்திகளினை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுவ தாகும். மரபுரிமைச் சின்னங்கள் சூரிய ஒளிக்கதிர்களின் தாக்கம், பலமான காற்றின் வேகம், காற்றினால் கொண்டு வரப்படும் ஈரத்தன்மை, உப்புக்காற்று, மழை நீர் உட்புகுதல், ஈரத்தன்மை, தூசிகள் படிதல் என்பன காரணமாக கண்ணுக்குக்கு புலப்பட முடியாதான மாற்றங்கள் சிறிது, சிறிதாக ஏற்பட்டு நாளடைவில் பெரும் சிதைவாக மாறிவிடுகின்றது. இவற்றின் தாக்கங்கள் முதலில் மரபுரிமை கட்டிடங்களின் மேற் பகுதியுடன் (பூச்சு, அரைச்சாந்து) தாக் கத்தை ஏற்படுத்துவதுடன், இரசாயன தாக்கங்களையும் விளைவிக்கின்றது. தாவரங்களும் மரபுரிமைச் சின்னங்களின் சிதைவிற்க்கு ஒர் காரணமாக அமை கின்றது. ஆல், மருதம், வேம்பு, மா போன்ற பெரிய மரங்களின் வேர்கள் மரபுரிமைக் கட்டிடங்களின் சுவர், கூரை, தூண், தரைப் பகுதிகளில் ஊடுருவி அவற்றில் வெடிப்புக்கள், பிளவுகளை ஏற்படுத்துவதுடன் சிறிய செடி, கொடி கள், பாசிகள் என்பவற்றின் வளர்ச்சிப் பரவலும் மரபுரிமைச் சிதைவிற்க்கு காரண மாக அமைகின்றது. தாவரங்களின் பரம்பலானது சுற்றுச்சூழல் காரணிகள் மற்றும் பறவைகள், விலங்குகளின் எச்சங்களினால் பரவலடைந்து மரபுரிமைக் கட்டிடங்களில் உற்பத்தி யாவதுடன் மேற்கூறப் பட்ட காலநிலை தாக்கங்களால் தமக்கு வேண்டிய போச ணைகளைப் பெற்று மேலும் வளர்ச்சிய டைகின்றன. ஈரத்தன்மை, வெப்பம், கற்கள் போன்றவற்றினால் கிடைக்கும் போசணை பாதார்த்தங்கள் மரபுரிமைக் கட்டிடங்களில் நுண்ணங்கிகளின் வளர்ச்சியினைத் தூண்டி அவற்றில் இராசாயனத் தாக்கத்தினை ஏற்படுத்தி சிதைவிற்கு வழி சமைக்கின்றது. கால் நடைகளின் எச்சங்கள், அவற்றின் நடமா ட்டத்தினால் ஏற்படும் அழுத்தங்கள், வெளவால், குருவிகளின் எச்சங்கள்,

கறையான், எறும்பு பெருக்கம் போன்றவற்றினாலும் மரபுரிமைக் கட்டிடங்கள் சிதைவடை கின்றன. சுனாமி, வெள்ளப்பெருக்கு, தீ போன்றவற்றினால் திடீரென ஏற்படும் இயற்கை அழிவுகளும் மரபுரிமை பாதுகாப்பு எதிர்நோக்கும் முக்கிய சவாலாகும். எனினும் முறையான முகாமைத்துவத்துவம், முன்னாயுத்த நடவடிக்கைகள் இத் தாக்கங்களிருந்து மரபுரிமைச் சின்னங்களினை ஒரளவு பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இயற்கை சார்ந்த பிரச்சனைகள் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய மரபுரிமைச் சின்னங்களாக சிறாப்பர் மடம், பழைய கச்சேரி, மணல் காடு, அச்சுவேலி, சக்கோட்டை, சங்கானை தேவாலயங்கள், யாழ் கோட்டை போன்ற -வற்றினை சில உதாரணங்களாக குறிப்பிட முடியும். இவ்வாறான காலநிலை, தாவரம், விலங்கு போன்ற இயற்கை ரீதியிலான தாக்கங்கள் சில வேளைகளில் மரபுரிமைச் சின்னங்களின் அமைவிடம் காரணமாக தவிர்க்க முடியாதிருப்பினும் பெரும்பாலும் மரபுரிமைச் சின்னங்கள் முறையாக பராமரிக்கப்படாமை, கண்காணிப்பு இன்மை காரணமாகவே இத் தாக்கங்கள் விரைவுபடுத்தப்படுகின்றது. எனவே திட்டமிடல் முறையில் மரபுரிமைச் சின்னங்களினை பராமரிப்புக்கு உட்படுதல், காவலாளர் களை நியமித்தல், பராமரிப்பு உத்தியேகத்தர்களை நியமித்தல், நாள், வாரம், மாத அடிப்படையில் உரிய உத்தியோத்தர்களால் மரபுரிமைச் சின்னங்கள் கண்காணிப்பிற்கு உட்படுத்துதல், சிதைவடைதலை கட்டுப்படுத்தும் முகமான முகாமைத்துவ நடவடிக்கை களை மேற்கொள்ளல் போன்றவற்றினூடாக யாழ்மரபுரிமைச் சின்னங்களினை அழிவிலிருந்து ஒரளவு பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

## முடிவுரை

யாழ்ப்பாணத்தின் தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் நிர்வாகப் பிரச்சனைகள் சார்ந்த வகையிலும், மரபுரிமை பிரதேசம் சார் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஊடான சமூகம் சார்ந்த பிரச்சனைகளாலும், மனித வள, நிதி, தொழிநுட்ப வளங்கள் சார்ந்த பிரச்சனைகளாலும், காலநிலை, தாவரங்கள், விலங்குகள் ஊடான இயற்கை ரீதியிலான பிரச்சனைகளாலும் காலத்திற்கு காலம் அழிவிற்கும், சிதைவிற்கும் உட்பட்டுள்ளன. இவ் பிரச்சனைகளில் ஒரு சில தவிர்க்க முடியாத வகையில் அமைந்திருந்தாலும், பெரும்பாலும் முறையான முகாமைத்துவம் மற்றும் விழிப்புணர்வு இல்லாதிருந்தமையே மரபுரிமைச்சின்னங்களின் அழிவினையும், சிதைவினையும் தடுக்க முடியாதாக்கியுள்ளன.

## References

Antiquities Ordinance. (1940). Sri Lanka.

Antiquities Ordinance. (1956) (Revision). Government of Ceylon Legislative Enactments.

Antiquities (Amendment) Act. No.24 of 1998. Sri Lanka.

Australia ICOMOS. (1999). The Burra Charter – The Australian ICOMOS charter for places of cultural significance. Australia.

Blondal, J. (2003). *Accounting and budgeting- key issues and recent developments*. OECD Journal on Budgeting, 3, 1., Department for Communities and local Government. UK.

Borton, A.D.(2000). *Accounting for public heritage facilities – assets or liabilities of the government*. Journal of auditing and accountability .

Howard, P. (2003). *Heritage: Management, Interpretation, identity*.Cornwall. Continuum International Publishing Group. London.

ICOMOS .(2010). New Zeeland,Charter .

Madawala, P.B. (2011). Conservation of Heritage, Management of Heritage Management. Work – shop on Conservation and Management of Heritage Sites in Jaffna, Published by Ministry of National Heritage. Colombo.

Pushparadnam, P. (2011) *Jaffna – Historical and Archaeological Perspective, Work – shop on Conservation and Management of Heritage Sites in Jaffna,* Published by Ministry of National Heritage. Colombo.

The Venice Charter. (1964). Charter for the conservation and Restoration of monument and Sites.